**OS.No.102/2013**

**நாள்:27.06.2019**

வா.சா.2 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வழக்கின் வாதியின் பெயர் மகிலன் ஆகும். வாதி மகிலன் உடன் பிறந்தவர்கள் 2 நபர்கள் ஆவார். வா.சா.ஆ.4 ஆவணம் எழுதி பதிவு செய்யும்போது நான் உடன் இருந்தேன். வா.சா.ஆ.4 ஆவணத்தில் நான் கையொப்பம் எதுவும் செய்யவில்லை. வா.சா.ஆ.4 ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்தவர்களின் பெயர்கள் எனக்கு தற்போது ஞாபகமில்லை. வாதியின் தந்தை விஜயனுக்கு தாவா சொத்துக்கள் வாய்மொழியாக பாகமாக கிடைத்த சொத்துக்கள் ஆகும். பாப்பிரெட்டிப்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.பி14/2013 என்று பதிவு செய்யப்பட்ட 14.03.2013 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணத்தின் சா.நகல் என்னிடம் காண்பிக்கப்படுகிறது. அந்த ஆவணத்தின் 17-ம் பக்கத்தில் சாட்சிகள் என்ற இடத்தில் வி.மகேந்திரன் என்று காணப்படும் கையொப்பம் என்னுடைய கையொப்பம் ஆகும். மேற்சொன்ன ஆவணம் பி.வா.சா.ஆ.1-ஆக குறியீடு செய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ-1 ஆவணமானது 1-ம் பிரதிவாதிக்கு பாகப்பிரிவினை செய்துக்கொடுத்த ஆவணம் என்றால் அந்த ஆவணத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. தாவா சொத்து கடந்த 1986 ஆம் ஆண்டு நடைபெற்ற பாகப்பிரிவினையில் விஜயன் என்பவருக்கு பாகமாக கிடைக்கப்பெற்ற சொத்து என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், உண்மையாக தாவா சொத்து கனகராஜ் என்பவர் 1-ம் பிரதிவாதியின் தந்தை ராமசந்திரனுக்கு எழுதிக்கொடுத்த 13.03.1985 ஆம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரய பத்திரம் மூலம் பிரதிவாதி தரப்புக்கு சொந்தம் என்று சொன்னாலும் சரியல்ல. நில மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நீண்டகால அனுபவம் இருந்தால் மட்டுமே அரசாங்கத்தால் சுவாதீன பட்டா வழங்கப்படும் என்றாலும், அவ்வாறு நீண்டகால சுவாதீனம் இல்லாத காரணத்தினால் மேற்சொன்ன திட்டத்தின் கீழ் வாதியின் தந்தை விஜயனுக்கு சுவாதீன பட்டா வழங்கப்பட்டது என்று நான் சொல்வது பொய்யாகும் என்றாலும் சரியல்ல. வாதி மற்றும் பிரதிவாதிகளின் குடும்ப விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். நான் எட்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். வாதியின் தந்தை கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தார் என்றால் சரிதான். வாதி சென்னையில் வசித்து வருகிறார். வாதியின் தந்தை அரூரில் குடியிருந்து வருகிறார். தாவா சொத்திற்கு அருகே 1-ம் பிரதிவாதியின் நிலம் இல்லை. தாவா சொத்திற்கு வடக்கே கோபால் நிலம் உள்ளது. வாதி சென்னையில் குடியிருந்து வருவதாலும், அதேபோல் வாதியின் தந்தை அரூரில் குடியிருந்து வருவதாலும், தாவா சொத்தில் வாதி பயிர் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல, ஆட்களை நியமித்து வாதி பயிர் செய்து வருகிறார், அவ்வப்போது வாதியும், வாதியின் தந்தையும் தாவா சொத்தை நேரடியாக பராமரிப்பார்கள். 1-ம் பிரதிவாதி பத்து வருட காலமாக பஞ்சாயத்து தலைவராக இருந்தார் என்றால் சரிதான். 1-ம் பிரதிவாதி பஞ்சாயத்து தலைவராக இருந்த சமயத்தில் பஞ்சாயத்தில் எனக்கு வேலை வாய்ப்பு கேட்டேன் என்றாலும், அதை 1-ம் பிரதிவாதி மறுத்துவிட்டதின் காரணமாக அவர் மீது விரோதம் கொண்டு தற்போது அவருக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/- கே.நம்பிராஜன்,<br>
மாவட்ட உரிமையியல் நீதிபதி,<br>
பாப்பிரெட்டிப்பட்டி.